# Voice of SBV – Enriching Mind Body & Soul

SBV PODCASTS

TRANSCRIPT

| Theme: EYE DONATION |
|---|
| Name : DR DIPIKA S<br>Designation : Post Graduate Resident<br>Department of Ophthalmology<br>MGMCRI ,College<br>University : SRI BALAJI VIDYAPEETH UNIVERSITY<br>Place :PONDICHERRY |

## TRANSCRIPT

**EYE DONATION**

அனைவருக்கும் வணக்கம்! நான் மருத்துவர் தீபிகா, மகாத்மாகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கண் மருத்துவர். உங்களிடம் கண்தானம் பற்றி சில கருத்துக்கள், தெளிவுகள் அளிக்க விரும்புகிறேன்.

1. **கண்தானம் என்றால் என்ன? நான் ஏன் கண்தானம் செய்ய வேண்டும்.**

   கண் கொடை அல்லது கண்தானம் என்பது, ஒருவர் இறப்புக்குப் பின்பு அவருடைய கண்களைத்தானமாக அளிப்பதாகும்.

   - இந்தியாவில் பார்வையற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 70 லட்சம் ஆகும்.
   - கருவழி நோயால் பார்வையிழந்த கருவிழி மாற்று சிகிச்சைக்காக காத்திருப்போரின் எண்ணிக்கை 10 லட்சம்.

**2. யார் கண் தானம் செய்யலாம்? நான் கண் தானம் செய்யலாமா?**

- ஆண் / பெண் இருபாலரும்
- அனைத்து வயதினரும் கண்தானம் செய்யலாம்.
- கண் கண்ணாடி அணிந்தவர்களும் செய்யலாம்.
- கண்புரை அறுவைச் சிகிச்சை செய்தவரும்
- இரத்த அழுத்த நோயாளிகள்
- நீரிழிவு நோயாளிகளும்
- ஆஸ்துமா நோயினால் தாக்கப்பட்டவர்களும் கண்தானம் செய்யலாம்.
- ஒரு ஆண்டுக்கும் தேவையான கருவிழிகளின் எண்ணிக்கை 75 ஆயிரம் முதல் 1 லட்சம் வரையுள்ளது.
- தானத்தில் சிறந்தது கண்தானம். ''உயிர் இருக்கும்போது செய்வது இரத்த தானம், இறந்த பின் செய்வது கண்தானம்.''
- இதுவே, நாம் சமுதயாத்திற்கு ஆற்றும் பெறும் கொண்டு ஆகும்.
- ஒருவர் இறந்தபின் கண்தானம் செய்தால், இருவருக்கு கண் பார்வை கிடைக்கும். இதுவே, நாம் செய்யும் பெறும் நல்ல செயல் ஆகும்.

**3. இறந்தவர்களின் கண்களை நாங்கள் எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?**

- இறந்தவர் உடல் இருக்குமிடத்தில் மின்விசிறியை நிறுத்தி வைக்க வேண்டும்.
- தலையை தலையனை வைத்து உயர்த்தி வைக்க வேண்டும்.
- மருத்துவர் வரும் வரை ஈரத்துணியை வைத்து இரு கண்களை மூடி வைக்க

வேண்டும்.

- திருநீரு, பூ போன்ற பொருட்களை மருத்துவர் வரும்வரை பயன்படுத்தக்கூடாது.

**4. இறந்தவர்களின் சடலங்களுக்கான மரியாதையை செய்து முடிந்தபின் மருத்துவர்களை அணுகலாமா? எப்போது மருத்துவரை நாங்கள் அணுக வேண்டும்?**

- இறந்த உடனே கண் மருத்துவரை அணுக வேண்டும்.
- ஒருவர் இறந்த 4 முதல் 6 மணி நேரத்திற்குள் அவரது கண்களை அகற்றப்பட வேண்டும்.

**5. இறந்தவர்களை நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்துவர வேண்டுமா? சிகிச்சை வீட்டில் மேற்கொள்ளப்படுமா? எவ்வளவு நேரம் ஆகும்?**

- அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் மட்டுமே கண்களை அகற்ற வேண்டும்.
- கண் வங்கிக் குழுவினர் கண்தானம் செய்தவரின் வீட்டிற்கே வந்து கண்களைப் பெற்றுக் கொள்வார்கள்.
- இந்த கண்களைத் தானமாக பெறும் நிகழ்வு 20 முதல் 30 நிமிடங்களில் முடிந்து விடும்.
- ஒற்றுமை மற்றும் தொற்றுநோய் பரிசோதனைக்காக சிறிது இரத்தம் இறந்தவரின் உடலில் இருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

**6. கண் எடுப்பதினால் விகாரத் தோற்றம் பெறுமா?**

இல்லை. இரு கண்களை எடுப்பதினால் முகம் மாறுபடாது. அதற்கு நாங்கள் செயற்கை கண் அளித்து முகத்தை மூடி விடுவோம்.

**7. இறந்தபின் உறவினர்களாக நாங்கள் என்ன செய்ய வேண்டும்?**

- மிக அருகிலுள்ள கண் வங்கிக்கு உடனடியாக நேரிலோ / தொலைபேசி மூலமாகவோ தகவல் அளிக்க வேண்டும். கண்தானம் செய்தவர் இறந்த உடனே கண் இமைகளை மூடி வைக்க வேண்டும். தொலைபேசி எண்: 413-2615449.
- இறந்தவரின் கணவன் / மனைவி, உடன் பிறந்தவர் அல்லது, நெருங்கிய உறவினர் ஒருவரும் மற்ற சாட்சிகள் இருவர் எழுத்து மூலம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**8. யார் எல்லாம் கண்தானம் செய்யக்கூடாது?**

- இரத்தப் புற்றுநோய் உள்ளவர்கள்
- எய்ட்ஸ் நோய் தொற்றினால் இறந்தவர்கள்.
- மஞ்சள்காமாலை தொற்றினால் இறந்தவர்கள் கண்தானம் செய்யக்கூடாது.

**9. கண்தானம் வாரம் என்றால் என்ன?**

25 ஆகஸ்ட் - 8 செப்டம்பர். மக்களிடம் விழிப்புணர்வு மற்றும் கண்தானம் செய்வதற்கு ஊக்குவிப்பதற்கு கருத்துக்கள் தெரிவிப்பர்.

**10. கண்தானம் செய்வதால் எங்களுக்கு என்ன பயன்? அகற்றப்பட்ட கண்கள் தேவையுள்ளவர்களுக்கு உடனே பொறுத்தப்படுமா?**

- ஒருவர் இறந்தபின் கண்தானம் செய்தால், இருவருக்கு கண் பார்வை கிடைக்கும். இதுவே, நாம் செய்யும் பெறும் நல்ல செயல் ஆகும்.
- இந்தியாவில் கண்தானம் மூலம் கிடைக்கும் கருவிழிகளின் எண்ணிக்கை 22 ஆயிரம்.
- தர பரிசோதனைகளுக்குப் பின்பு நல்ல நிலையில் கிடைப்பது 40% முதல் 50% சதவீதம்தான்.
- தானமாக பெறப்பட்ட கண்களை பாதுகாப்பாக செயல்படுகின்றன. (கண் வங்கி)
- பிற கருவிழிகள் வேறு சில ஆய்வுப் பணிக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. (ஆய்வு)

**11. கண்தானம் செய்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

- நாம் நமது கண்களை தானம் செய்ய முன் வரவேண்டும் இதற்கு மருத்துவமனையில் நாம் ஒப்புதல் படிவம் அளித்து உறுதி செய்ய வேண்டும்.
- நம் நெருங்கிய உறவினர்களுக்கும், குடும்பத்தினருக்கும் தெரிவிக்க வேண்டும்.
- தொலைபேசி எண்: 413-2615449

**12. கண்தானம் செய்வதற்கு ஏதேனும் கட்டணம் செலுத்தனுமா?**

தேவைப்படாது. இது முற்றிலும் நம் விருப்பத்தின் செயல் ஆகும்.

**முடிவுரை:**

இதுவரை நான் கூறிய சில கருத்துக்கள் / தெளிவுரைகள் உங்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

நாம் மற்றவர்களும் இதை தெளிவுபடுத்தி ஊக்குவித்து, கண்தானம் செய்வதற்கு உறுதி செய்ய வேண்டும்.

**13. வேறு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேளுங்கள்.**

இல்லை. மருத்துவர் என்னுடைய அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கம் அளித்ததற்கு நன்றி.